பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 27 வியாழக்கிழமை 15.12.2022 கதிர் 291

## அட்டப்பளம் வாகன விபத்தில் அரச உத்தியோகத்தர் மரணம்



அம்பாறை மாவட்டம், நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்கரைப்பற்று– கல்முனை பிரதான வீதி அட்டப்பளம் பகுதியில் இன்று இடம்பெற்ற வாகன விபத்தில் அரச 2



## 180 கிலோ கஞ்சாவுடன் யாழில் ஒருவர் கைது!

(ந.லோகதயாளன்)

தமிழகத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்குக் கடத்தி வரப்பட்ட 180 கிலோகிராம் கஞ்சா கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது. 8

# கோட்டாபயவை விரட்டியடித்து விட்டு ஜனாதிபதியாகத் திட்டம் போட்ட பஸில்



### அம்பலப்படுத்தினார் கம்மன்பில

கோட்டாபய ராஜபக்சவின் ஆட்சியில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக அந்த நெருக்கடியை மேலும் பெரிதாக்குவதற்கே பஸில் ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்திருந்தார். கோட்டாவை விரட்டி நாடாளுமன்றம் ஊடாகத் தான் ஜனாதிபதியாகும் திட்டத்திலேயே பஸில் செயற்பட்டார்.

– இவ்வாறு புதிய ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் கூறுகையில்,

கோட்டாவின் ஆட்சியில் தோன்றிய பொருளாதார நெருக்கடி உக்கிரமடையாமல் தடுப்பதற்குப் போதுமான வாய்ப்பு இருந்தது. ஆனால், பஸில் அதைச் செய்யவில்லை. 2

# தனித்துப் போட்டியிடுவது குறித்து தமிழரசு தனித்து முடிவெடுக்காது!

### யாழில் சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு




(ந.லோகதயாளன்)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தனித்தனியாகப் போட்டியிடுவது குறித்து பங்காளிக் கட்சிகளுடன் இணைந்து அவர்களுடன் சமரசமாகப் பேசித்தான் முடிவு எடுப்போமே தவிர தனித்துத் தீர்மானத்தை எடுப்போம் எனக் கூறவில்லை.

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார். 8

## தேர்தல் பற்றியும் கட்சி பற்றியும் கவலைப்படாத ஒருவர் ரணிலே!

### அமைச்சர் ஹரின் கூறுகின்றார்



தேர்தல் பற்றியும் கட்சி பற்றியும் கவலைப்படாத ஒருவர் ரணில் விக்கிரமசிங்கதான் – என்று சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

'இப்போதுள்ள அரசியல் தலைவர்கள் 2

## ஒரு கல்லில் பல மாங்காய்களை விழுத்த நினைக்கின்றார் ரணில்

### முன்னாள் எம்.பி. ஸ்ரீநேசன் சுட்டிக்காட்டு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஒரு கல்லில் பல மாங்காய்களை விழுத்த நினைக்கின்றார் – என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்தார். 8

## மக்கள் விரும்பும் ஆட்சியை உருவாக்க இடமளியுங்கள்

### ரணிலிடம் ஜே.வி.பி. வலியுறுத்து

மக்களின் ஆசிர்வாதம் இல்லாமல் எந்தவோர் அரசாலும் முன்னோக்கிச்செல்லமுடியாது. ஆட்சியைக் கொண்டு நடத்த முடியாது. முதலில் மக்கள் அவர்கள் விரும்பும் ஆட்சியை உருவாக்குவதற்கு அவர்களுக்கு அரசு சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

– இவ்வாறு ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் 2

### அல்வாயில் வன்முறைக் கும்பல் மோதல்

## காயமடைந்தவர்களை ஏற்றச் சென்ற அம்புலன்ஸ் வாகனம் மீதும் தாக்குதல்




யாழ்., பருத்தித்துறை – அல்வாய் வடக்கு பகுதியில் இரு வன்முறைக் கும்பல்களுக்கிடையில் நேற்றிரவு இடம்பெற்ற மோதலில் காயமடைந்தவர்களை ஏற்றச் சென்ற அம்புலன்ஸ் வாகனம் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன், உயிர்காப்புப் பணியாளர்கள் அச்சுறுத்தப்பட்ட சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

நேற்றிரவு 11 மணியளவில் இரு வன்முறைக் கும்பல்களுக்கிடையில் 2

### பருத்தித்துறையில் வீடு புகுந்து திருட்டு:

## 14 பவுண் நகைகளுடன் 4 பேர் வசமாக சிக்கினர்



யாழ்., பருத்தித்துறையில் வீடொன்றை உடைத்து நகைகளைத் திருடிய குற்றச்சாட்டில் நான்கு இளைஞர்களைக் கைது செய்த பொலிஸார், அவர்களிடமிருந்து 14 பவுண் நகைகளையும் மீட்டனர்.

பருத்தித்துறை, புலோலி–சாரையடிப் பகுதியில் கடந்த 7ஆம் திகதி வீட்டின் உரிமையாளர்கள் வைத்தியசாலைக்குச் சென்றதைச் சாதகமாகப் பயன்படுத்திவீடுஉடைக்கப்பட்டு அங்கிருந்த நகை 2

## 2 நாய்களை விழுங்கிய முதலை மடக்கிப் பிடிப்பு



யாழ்., தென்மராட்சி, சாவகச்சேரியில் இரண்டு நாய்களை உயிருடன் விழுங்கிய முதலையை ஊரவர்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

சாவகச்சேரி சிவன் கோயிலடியில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றினுள் நேற்றிரவு உட்புகுந்த சுமார் எட்டடி நீளமான முதலை 8

## தேர்தல் பற்றியும் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் பிரச்சினையைச் சரியாகப் புரிந்து வைத்துள்ளார்களா?' என்று எழுப்பிய கேள்விக்கு அவர் பதிலளிக்கும் போது,

இல்லை. புரிந்து வைத்திருந்தால் இந்தக் கஷ்டமான காலத்தில் தேர்தல் ஒன்றைக் கேட்டு நிற்கமாட்டார்கள்.

மீண்டும் ஐக்கிய தேசிய கட்சி அரசு மலராது. நாட்டின் தற்போதையை நிலைமையின் கீழ் எந்தக் கட்சி தேர்தலில் வென்றாலும் அவர்களால் 113 ஐ பெற முடியாது.

மக்களின் பிரச்சினைகள் அப்படியே இருக்க இவர்கள் எல்லோரும் தேர்தலை நோக்கியே பயணிக்கின்றனர்.

எரிபொருள் உள்ளிட்ட பிரச்சினை ஓரளவு சரி வந்ததும் அதை வைத்துக் கொண்டு உடனே தேர்தலுக்குப் போவதற்கு முயற்சி செய்கின்றனர்.

எல்லோரும் தேர்தல் தேர்தல் என்றே நிற்கின்றனர். ஆனால், தேர்தல் பற்றியும் கட்சி பற்றியும் கவலைப்படாத ஒருவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான் – என்றார்.

## 14 பவுண் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் ரொகக்கப்பணம் என்பன திருடப்பட்டிருந்தன.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வந்த பருத்தித்துறை பொலிஸ் குற்றத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைவாக, நேற்று (14) குற்றத் தடுப்பு பிரிவின் உப பரிசோதகர் எஸ்.ஐ. விராஜ் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த நால்வர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து தாலிக் கொடி, மோதிரம், தோடு அடங்கலாக 14 பவுண் நகையும் மீட்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. விசாரணையின் பின்னர், அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## கோட்டாபயவை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமையைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்துவதற்கு அவர் திட்டம் தீட்டினார்.

பொருளாதார நெருக்கடி உக்கிரமடைந்து கோட்டா பதவியை விட்டு ஓடினால் நாடாளுமன்றத்தின் ஊடாக ஜனாதிபதியாகும் திட்டம் ஒன்றை பஸில் வகுத்திருந்தார். அதற்காவே இரசாயன பசளைக்கான தடைக்கு அவர் அனுமதி வழங்கினார்.

இரசாயனப் பசளைக்கான தடை எந்தளவு விளைவை நாட்டில் ஏற்படுத்தும் என்று தெரிந்தும்கூட பஸில் அதற்கு அனுமதி வழங்கினார்.

அதேபோல் ,எரிபொருள் நெருக்கடி வந்தபோது 14 மணிநேர மின் வெட்டுக்கு பஸில் அனுமதி வழங்கினார்.

இவை அனைத்தும் நாட்டில் பெரும் மக்கள் எழுச்சியை ஏற்படுத்தும். அதனூடாகக் கோட்டா பதவியை விட்டு ஓடுவார் என்று பஸில் அறிந்து வைத்திருந்தார்.

அப்படி நடந்தால் நாடாளுமன்றத்தின் ஊடாக ஜனாதிபதியாவதுதான் பஸிலின் திட்டம். ஆனால், இடையில் வந்து ரணில் விக்கிரமசிங்க புகுந்து கொண்டதால் எல்லாம் பிழைத்து விட்டது – என்றார்.

## மக்கள் விரும்பும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

பொருளாதார நெருக்கடி காரணமாகப் பல தொழில் நிபுணர்கள் நாட்டைவிட்டுவெளியேறிவருகின்றனர். அவர்களுள் வைத்தியர்களும் அடங்குவர். பல வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டனர். மேலும் பல வைத்தியர்கள் வெளியேறுவதற்காகச் சுகாதார அமைச்சிடம் அனுமதி கோரியுள்ளனர். அந்தவகையில் ஒவ்வொரு நாளும் சராசரியாக ஐந்து வைத்தியர்கள் இவ்வாறு விண்ணப்பித்து வருகின்றனர்.

பொருளாதார நிலைமை ஒருபுறம் இருக்க, ஒரு இலட்சம் ரூபாவுக்கு அதிகமாகச் சம்பளம் எடுப்பவர்களைப் பாதிக்கும் வகையில் அரசு அறிமுகப்படுத்தியுள்ள வரியால் வைத்தியர்கள் வெளியேறுவது மேலும் அதிகரித்துள்ளது. மக்கள் விரும்புகின்ற –நம்புகின்ற ஆட்சியை உருவாக்க வேண்டும். அப்போதுதான் சர்வதேச நாடுகள் எமக்கு உதவும் என அந்த நாடுகளே தெரிவித்துவிட்டன.

வெளிநாடுகளில் பணிபுரிகின்ற எமது நாட்டு ஊழியர்களே நாட்டுக்குப் பணம் அனுப்புவதில்லை. அந்தளவுக்கு இந்த அரசு மீது அவர்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். இந்தநிலையில் எப்படி வெளி நாடுகள் எமக்கு உதவி செய்யும்? மக்களின் ஆசிர்வாதம் இல்லாமல் எந்தவோர் அரசாலும் முன்னோக்கிச் செல்ல முடியாது. ஆட்சியைக் கொண்டு நடத்த முடியாது. முதலில் மக்கள் அவர்கள் விரும்பும் ஆட்சியை உருவாக்குவதற்கு அரசு சந் தர்ப்பம் வழங்க வேண்டும். அப்போதுதான் இந்தநாடு முன்நகரும்.

2019 ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை மக்கள் நிராகரித்தனர். அவரை நிராகரித்தவர்களே கோட்டா பயவுக்கு வாக்களித்தனர்.

2020 நாடாளுமன்றத் தேர்தலிலும் ரணிலுக்கு எதிராகவே வாக்குக் கேட்டனர். அதன்படியே மக்கள் மொட்டுக் கட்சிக்கு வாக்களித்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொடுத்தனர். இப்போது அந்த ரணில் நல்லவர் என்று கூறிக்கொண்டு அவரை நாடாளுமன்றம் ஊடாக ஜனாதிபதியாக்கியுள்ளார்கள் – என்றார்.

## காயமடைந்த ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாள்வெட்டுமோதல் இடம்பெற்றுள்ளது. இதில் பலா காயமடைந்த தகவல் வழங்கப்பட்ட நிலையில் 1990 அவசர அம்புலன்ஸ் வாகனம் சம்பவ இடத்துக்குச் சென்று காயமடைந்தவாகளை வைத்தியசாலைக்கு ஏற்றிச் சென்றது.

இதன்போது அம்புலன்ஸ் வாகனத்தை வழிமறித்த காடையாகள் அம்புலன்ஸ் வாகனம் மீது தாக்குதல் நடத்தியதுடன், அதிலிருந்த உயிர்காப்புப் பணியாளாகளைக் கடுமையாக அச்சுறுத்தினா. எனினும், அம்புலன்ஸ் வாகனம் அங்கிருந்து நோயாளாகளை ஏற்றிக்கொண்டு வைத்தியசாலைக்குச் சென்றது. இந்தச் சம்பவம் தொடாபாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## அட்டப்பளம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்தார்.

திருக்கோவில் பிரதேச செயலகத்தில் பிரதம நிர்வாக சேவை உத்தியோகத்தராகக்கடமையாற்றும்அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பைச் சேர்ந்த ஆ. சசிந்திரன் என்பவரே உயிரிழந்தார்.

இவர் சமய, கலாசார, ஆன்மீக விடயங்களில் கூடுதலான ஈடுபாடு கொண்டவர்.

உயிரிழந்தவரின் சடலம் கல்முனை அஷ்ரப் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணையை நிந்தவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## வர முன் காப்போம்!

பொருளாதார வீழ்ச்சிக்கு எதிரான போராட்டம் ஒன்றை நாடும் மக்களும் முன்னெடுத்துக் கொண்டிருக்கையில், சுகாதாரத் துறை சார்ந்த இன்னொரு பெரிய போராட்டத்துக்கும் மக்கள் முகம் கொடுக்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது.

டெங்குப் பேரரக்கன் என்ற நோய்ப் பரவல் இலங்கை மக்களை பேரிடருக்குள் தள்ளி வருகின்றது.

டெங்கினால் பீடிக்கப்பட்ட பொது மக்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருவது மருத்துவ – சுகாதாரத் துறையினருக்குப் பெரும் அதிர்ச்சியைத் தருவதாக அமைந்துள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து, இரண்டு மடங்கையும் தாண்டி, உயர்ந்து நிற்கிறது.

டெங்கு தேசியத் தடுப்புப் பணியகம் இந்த ஆண்டில் இதுவரை 70 ஆயிரத்து 826 பேருக்கு டெங்கு நோய்த் தொற்றுப் பரவல் ஏற்பட்டிருக்கின்றது என்று கூறியுள்ளது. கடந்த வருடம் இந்தக் காலப் பகுதியில் மொத்தமாக 29 ஆயிரத்து 650 டெங்கு நோயாளரே அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

ஏறத்தாழ இந்த காலகட்டத்துக்குள் மேலதிகமாக 41,178 நோயாளர்கள் இந்தத் தொற்றுப் பீடிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

குறிப்பாக கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி மாவட்டங்கள் டெங்குப் பரவல் எண்ணிக்கையில் முன்னணியில் நின்றாலும், யாழ்ப்பாணம் உட்பட தமிழ் மாவட்டங்களின் நிலைமை அவற்றுக்குச் சற்றும் குறைவானது அல்ல என்றும் சுட்டப்படுகின்றது.

நாட்டின் 28 மருத்துவ அதிகாரிகள் பிரிவுகளில், சுமார் 58 பிரதேசங்கள் உயர் டெங்குப் பரவல் பகுதிகளாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

டெங்கு நோய்க் கிருமிகளைக் காவும் நுளம்புகளின் பரவலைக் கட்டுப்படுத்தாவிட்டால், இந்த நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்துவது இயலாததாகிவிடும் என்று சுகாதாரத் துறை வட்டாரங்கள் எடுத்துரைக்கின்றன.

இது தொடர்பில் மக்களுக்குப் போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் அறிவூட்டல்களை வழங்கிய பின்னரும், பலர் பொறுப்பற்றுச் செயல்படுகின்றமைதான் இந்த நோய்ப் பாதிப்பு உயர்வுக்குப் பிரதான காரணம் என்று சுகாதாரத் துறையினர் குறை கூறுகின்றனர்.

தங்கள் சுற்றுச்சூழலை அவதானிப்புடனும், கவனிப்புடனும் பேணும் பொறுப்புணர்வு மக்களுக்கு முழுமையாக வராத வரை இந்த நெருக்கடியில் இருந்து மீளுவது துர்லபமே.

அதுவும் பொருளாதார நெருக்கடியால் மருத்துவ சேவைகள், சுகாதாரப் பராமரிப்புப் பணிகள் பின்னடைவு கண்டு வரும் இச்சூழலில், பொதுமக்கள் விழிப்புணர்வுடன் செயல்பட்டு, வர முன் காப்பது மிக மிக முக்கியமாகும். அதுவே சமுதாயத்தை இந்தப் பாதிப்பில் இருந்து காப்பாற்றும்.

# வங்குரோத்து நிலையில் இருந்து நாட்டை மீட்பதற்கு நடவடிக்கை!



நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடனில் இருந்து விடுபட்ட பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி கடனை திருப்பி செலுத்தக்கூடிய நிலையான பொருளாதாரத்தை உருவாக்குவேன் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜப்பான்–இலங்கை உறவுகளின் 70 வருடங்களை முன்னிட்டு நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

# வைத்தியர்களுக்கும் 60 வயதில் கட்டாய ஓய்வு நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பிப்பு!

அரச ஊழியர்களின் கட்டாய ஓய்வு தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் வைத்தியர்கள் மற்றும் விசேட வைத்தியர்களை உள்ளடக்கியதை இடைநிறுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (புதன்கிழமை) இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

அதன்படி 2023 ஜனவரி 25, வரை மருத்துவர்கள் மற்றும் நிபுணர்களுக்கு 60 வயது கட்டாய ஓய்வு வயது விதிக்கப்படாது.

176 விசேட மருத்துவ நிபுணர்களால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு மீதான விசாரணையின் பின்னர் இந்த இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அரச ஊழியர்கள் 60 வயதுக்குள் ஓய்வு பெற வேண்டும் என்ற வர்த்தமானி அறிவித்தலை டிசெம்பர் 5 அன்று, பிரதமர் தினேஷ் குணவர்தன பொது நிர்வாக அமைச்சர் என்ற வகையில் வெளியிட்டார்.

# பசறை பிரதேச செயலகப் பிரிவில் புயல் பாதித்த குடும்பங்களுக்கு ஆரம்பகட்ட நட்டஈடு வழங்கல்!



பசறை பிரதேச செயலகப் பிரிவில் புயலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆரம்பகட்ட நட்டஈடு வழங்கிவைக்கப்பட்டது.

பசறை பிரதேச செயலகப் பிரிவில் புயலால் பாதிக்கப்பட்ட 180 குடும்பங்களுக்கு, வீடுகளை சீர்செய்ய முதற்கட்டமாக 10 ஆயிரம் ரூபாவை நிவாரண தொகையை நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸாநாயகவும் இ.தொ.கா. செந்தில் தொண்டமானும் இணைந்து நேற்று (புதன்கிழமை) வழங்கிவைத்தனர்.

# வட்டாரங்களை குறைப்பதற்கு எதிரான தீர்மானம் காரைநகர் பிரதேச சபையில் நிறைவேற்றப்பட்டது!



உள்ளூராட்சி மன்றங்களின் வட்டாரங்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு எதிரான தீர்மானம் ஒன்று நேற்று (புதன்கிழமை) காரைநகர் பிரதேச சபையில் நிறைவேற்றப்பட்டது.

சபையின் மாதாந்த சபைக்கூட்டம் நேற்று சபையின் தவிசாளர் பாலச் சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதன்போது மேற்படி பிரேரணையினை தவிசாளர் சபையில் முன்வைத்தார்.

இந்த பிரேரணைக்கு, ஈ.பி.டி.பி கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி உட்பட அனைத்து கட்சிகளினது உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்தனர்.

அதனையடுத்து பிரேரணை சபையில் தீர்மானமாக்கப்பட்டது.

இந்த தீர்மான அறிக்கை பிரதேச செயலர், உள்ளூராட்சி அமைச்சர், வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கவுள்ளதாகத் தவிசாளர் தெரிவித்துள்ளார்.

# பாடசாலைகள் மற்றும் முன்பள்ளிகளுக்கு நோய்வாய்ப்பட்ட பிள்ளைகளை அனுப்பாதீர்!

சுவாச நோய்களால் பாதிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் சுவாச நோய் நிபுணர் சன்ன டி சில்வா இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இன்புளுவன்சா உள்ளிட்ட பல வைரஸ் நோய்களால் சிறுவர்கள் பாதிக்கப்படுகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். நோய்வாய்ப்பட்ட பிள்ளைகளை பாடசாலைகள் மற்றும் முன்பள்ளிகளுக்கு அனுப்ப வேண்டாம் என அவர், பெற்றோருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

# ஈரான் தயாரிப்பு ட்ரோன்களின் உதவியுடன் உக்ரைன் மீதான ரஷ்யத் தாக்குதல் நீடிப்பு!





கீவ், டிச.15

உக்ரைனைத்தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும் என்கிற நோக்கில் கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி போரை தொடங்கியது ரஷ்யா.

இந்நிலையில், அமெரிக்கா மற்றும் பல மேற்கத்திய நாடுகளின் ஆதரவுடன் உக்ரைன் இராணுவம் ரஷ்யப் படைகளைத் துணிவுடன் எதிர்த்து நிற்கிறது. அதே வேளையில் ரஷ்யாவும் போரில் இருந்து பின்வாங்குவதாக இல்லை. இதனால் போர் முடிவில்லாமல் நீண்டு கொண்டே செல்கிறது. ரஷ்யாவின் ட்ரோன் தாக்குதலால், உக்ரைனின் ஒடேசா நகரில் சுமார் 1.5 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் மின்சாரம் இன்றித் தவிக்கின்றனர் என உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், கிவ் மேயர் விட்டலி கிளிட்ச்சோவின் டெலிகிராம் பதிவில், இந்த தாக்குதலில் ஈரானில் தயாரிக்கப்பட்டாஹெட்ட்ரோன்கள்சம்பந்தப்பட்டிருக்கின்றன என அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஷ்ராப்னல் மத்திய வெ்சென்கிவ்ஸ்கி மாவட்டத்தில் உள்ள 5 நிர்வாக கட்டடங்களை ட்ரோன்கள்

சேதப்படுத்தின. உயிர்ச்சேதம் குறித்த எந்த தகவல்கள் உடனடியாக வெளியாகவில்லை.

கீவ் மற்றும் பிராந்தியத்தின் மீது உக்ரைன் படைகள், ஆளில்லா விமானங்களைச்சுட்டு வீழ்த்தின என ஆளுநர் ஓலெக்ஸி குலேபா தெரிவித்துள்ளார்.

# அரசியல் போராட்டங்களால் போர்க்களமாகியது பிரேசில்





பிரேசிலியா,டிச.15

உலகின் 4 ஆவது மிகப்பெரிய ஜனநாயக நாடான பிரேசிலில் கடந்த ஒக்டோபர் 2ஆம் திகதி அதிபர் தேர்தல் நடந்தது. அதிபர் பதவிக்கான போட்டியில் அப்போதைய அதிபர் ஜெயீர் போல்சனரோ உள்பட மொத்தம் 9 பேர் களத்தில் இருந்தனர். போல்சனரோ அரசு மக்களிடம் கடும் எதிர்ப்புகளையும், விமர்சனங்களையும் எதிர்கொண்டதால் இந்த தேர்தலில் அவரது வெற்றி வாய்ப்பு கேள்விக்குறியாக இருந்தது.

இதையடுத்து தேர்தல் முடிவுகளின்படி இடதுசாரி தலைவரும், முன்னாள் அதிபருமான லுலு டா சில்வா 50.90 சதவீத வாக்குகள் பெற்று மீண்டும் பிரேசில் அதிபாராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதேசமயம்ஜெயீர்போல்சனரோ 49.10 சதவீத வாக்குகள் பெற்று தோல்வியைத் தழுவினார். இருப்பினும் தனது தோல்வியை ஏற்க போல்சனாரோ மறுத்து வருகிறார்.

இதன் தொடர்ச்சியாக அவரது ஆதரவாளர்கள் நாட்டின் பல இடங்களில் போராட்டத்தை நடத்தத் தொடங்கினர். இதனிடையே சட்டம்,ஒழுங்கை சீர்குலைக்க பொதுமக்களை தூண்டிய குற்றச்சாட்டில், போல்சனாரோ ஆதரவு பழங்குடி தலைவரான ஜோஸ் அகாசியோ கைது செய்யப்பட்டார். இதற்கு போல்சனாரோ ஆதரவாளர்கள் கடும் கண்டனம் தெரிவித்து வந்த நிலையில், சிலர் வன்முறையில் இறங்கி வாகனங்களை தீயிட்டு கொளுத்துவது, பொது சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பது, பொலிஸ் நிலையங்களை முற்றுகையிடுவது உள்ளிட்ட செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் நாட்டின் பல இடங்கள் போர்க்களம் போல் காட்சியளிக்கின்றன. இந்நிலையில் இந்த அனைத்துவன்முறைகளுக்கும்போல்சனாரோவே காரணம் என தற்போதைய அதிபர் லுலு டா சில்வா குற்றம் சாட்டியுள்ளார்.





# உலகப் பணக்காரார் தரவரிசை; பின்தள்ளப்பட்டார் எலான் மஸ்க்

*கலிபோர்னியா, டிச.15*

*உலகப் பணக்காரர்கள் பட்டியலில் எலான் மஸ்க் முதலிடத்தில்இருந்து2ஆம்இடத்திற்குத்தள்ளப்பட்டுள்ளார். கடந்த திங்கள் கிழமை டெஸ்லா நிறுவன பங்குகளில் ஏற்பட்ட சரிவே இதற்கு காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.*

*தற்போது உலக பணக்காரர்கள் பட்டியலில் முதலிடத்தை பெர்னார்ட் அர்னால்ட்பிடித்துள்ளார். டெஸ்லா பங்குகள் 4 சதவீதம் வீழ்ச்சியை கண்டுள்ளது. இதனால், இரண்டாவது இடத்தில் 164 பில்லியன் டொலர்களுடன் எலான் மஸ்க் பின்தங்கி உள்ளார்.*

*முதலிடத்தில் பிரான்ஸ் நாட்டை சேர்ந்த பெர்னார்ட் அர்னால்ட் 171 பில்லியன் டொலர்கள் சொத்து மதிப்புடன் முந்தியுள்ளார். 73 வயதான பெர்னார்ட் அர்னால்ட், எல்விஎம்ஹெச் நிறுவத்தின் தலைவராக இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.*

# ஹங்கேரியில் 20ஆண்டுகளுக்கு பின் வரலாறு காணாத பணவீக்கம் உயர்வு



புடாபெஸ்ட், டிச.15

உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்ததை கண்டித்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ரஷ்யா மீது வரலாறு காணாத பொருளாதார தடைகளை விதித்தன. இதன் எதிரொலியாக சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரித்ததோடு, ரஷ்யாவிடம் இருந்துஎரிபொருள் இறக்குமதி செய்யும் நாடுகளின் பொருளாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. அந்த வகையில் ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ஹங்கேரியில், ரஷ்யா–உக்ரைன் போர்

தொடங்கிய பிறகு அத்தியாவசியபொருள்களின்விலை கடுமையாக உயர்ந்து வருகிறது. ஹங்கேரியில்தற்போது பணவீக்கம் கடந்த 20 ஆண்டுகளில் இல்லாத அளவு 22.5 வீதமாக உயர்ந்துள்ளது.

இதனிடையே அத்தியாவசிய பொருள்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த, ஹங்கேரி அரசு விலை உச்சவரம்புகளைநிர்ணயம்செய்தது. இதன் காரணமாக அங்கு வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். மேலும், ஹங்கேரி பிரதமர் விக்டர் ஓர்பான் மேற்கொண்ட நடவடிக்கைகள் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த போதுமானவையாக இல்லை என அந்நாட்டு வணிகர்கள்தெரிவித்துவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



# இந்தியா பரிசளித்த காந்தி சிலை நேற்று ஐ.நா. முன்றிலில் திறப்பு

நியூயோர்க், டிச.15

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள ஐ.நா. சபை தலைமையகத்தில் மகாத்மா காந்தி சிலை நேற்றையதினம் திறந்து வைக்கப்பட்டது. மத்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கரும், ஐ.நா. பொதுச்செய லாளர் ஆன்டனியோ குட்டரசும் இணைந்து இந்தச் சிலையைத் திறந்து வைத்தனர்.

இந்தச் சிலை, இந்தியா பரிசாக அளித்தது. ஐ.நா. தலைமையகத்தில் காந்தி சிலை நிறுவப்படுவது இதுவே முதல்முறை. நடப்பு டிசம்பர் மாதத்தில், ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலின் தலைமைப் பொறுப்பை இந்தியா வகித்து வருகிறது. இந்த நேரத்தில் காந்தி சிலை திறக்கப்பட்டுள்ளது.

குஜராத்தில் உள்ள பிரமாண்டமான படேல் சிலையை வடிவமைத்த ராம் சுதார் என்ற பிரபல சிற்பி, காந்தி சிலையையும் உருவாக்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பீகாரில் விஷ சாராயம் குடித்து இரு நாள்களில் 21 பேர் சாவு!



பாட்னா,டிச.15

பீகார் மாநிலத்தில் கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் பூரண மதுவிலக்கு அமுலில் உள்ளது. ஆனால் அந்த மாநிலத்தின் பல பகுதிகளில் விஷ சாராய விற்பனை தாராளமாக நடைபெறுகிறது. அதனால் மதுவிலக்கைத் தாண்டி உயிர்ப்பலிகள் தொடர்கின்றன. அங்குள்ள சரன் மாவட்டத்தில் மட்டும் இந்த ஆண்டு சுமார் 50 பேர் வி சாராயத்தால் உயிரிழந்திருக்கின்றனர்.

இந்நிலையில் அந்த மாவட்டத்தில் நேற்று முன்தினமும், நேற்றும் பலரின் உயிரை வி சாராயம் பறித்தது. அங்குள்ள தோய்லா, யாது மோட் கிராமங்களில் அனுமதியின்றி விற்கப்பட்ட வி சாராயத்தை வாங்கி பலர் குடித்தனர். அவர்களில் பெரும்பாலானோ ருக்கு உடனடியாக உடல்நல பாதிப்பு ஏற்பட்டது. வைத்தியசாலைகளில், அனுமதிக்கப்பட்ட அவர்களில் 21 பேர், நேற்று முன்தினம் இரவும், நேற்று காலையும் உயிரிழந்தனர். மேலும் பலருக்கு பார்வையிழப்பு

ஏற்பட்டது. இந்த சம்பவத்தால் ஆத்திரம் அடைந்த கிராமத்தினர், மாநில நெடுஞ்சாலையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வி சாராய சாவு சம்பவம் சட்டசபையிலும் எதிரொலித்தது. வி சாராய விற்பனையை அரசு தடுக்கத் தவறிவிட்டதாகவும், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்குப்இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் பா.ஜ.கட்சி எம்.எல்.ஏ.க்கள் முழக்கமிட்டனர். பதிலுக்கு அவர்களை நோக்கி முதலமைச்சர் நிதிஷ்குமார் கை நீட்டி ஆவேசமாக பேசினார்.

மாநிலத்தில் வி சாராய விற்பனையில் எதிர்க்கட்சியினர்தான் ஈடுபடுகின்றனர் எனவும் அவர் குற்றம்சாட்டினார். ஆளுங்கட்சி - பா.ஜ.க. இடையிலான கடும் மோதல் தொடர்ந்ததால், சட்டசபை 15 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது. அதன்பிறகும் கூச்சல், அமளி நீடித்தது. அதைத் தொடர்ந்து பா.ஜ.கட்சி எம்.எல்.ஏ.க்கள் வெளிநடப்பு செய்தனர்.

வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வரும் மேலும் பலரின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதால், பலிஎண்ணிக்கை மேலும்உயரக்கூடும் என அஞ்சப்படுகிறது. இதற்கிடையில் மக்களவையில் நேற்று இந்தப் பிரச்சினையை பா.ஜ.கட்சி எம்.பிக்கள் ஜனார்தன் சிங்சிக்ரிவால், ரவிகின் சுக்லா ஆகியோர் எழுப்பினர். சரன் மாவட்ட பொலிஸ் சூப்பிரண்டை உடனடியாக பணியிடை நீக்கம் செய்ய வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்




# போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து அமெ. விசா பெற முயன்றவர் கைது!

புதுடெல்லி, டிச.15

டெல்லியை சேர்ந்த ஜஸ்விந்தர் சிங் என்பவர் அமெரிக்க சொகுசு வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு, அமெரிக்கவாசியாகிவிட வேண்டும் என்ற எண்ணத்துடன் அமெரிக்காவில் தன்னுடன் பிறந்த இரட்டை சகோதரன் இறந்துவிட்டார் எனவும், இறுதிச்சடங்கிற்கு செல்ல வேண்டும் என கூறி விசாவுக்கு விண்ணப்பித்திருந்தார்.

இதற்காக போலியான ஆவணங்களை தயார் செய்திருந்தார். ஆனால் அவர் போலி ஆவணங்களைக் கொண்டு விசாவுக்கு விண்ணப்பித்தமையை அமெரிக்க தூதரக அதிகாரிகள்

கண்டுபிடித்தமையுடன், ஜஸ்விந்தர் சிங்கை பிடித்து டெல்லி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்நிலையில், பொலிஸார் வழக்குப் பதிவு செய்து ஜஸ்விந்தர் சிங்கைக் கைது செய்தமையுடன், போலி ஆவணங்கள் தயாரிக்க அமெரிக்காவில் இருந்து உதவியவரையும் வழக்கில் சேர்த்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.



# சென்னை– அந்தமான் விமான சேவைகள் ஓடுபாதை சீரமைப்புக் காரணமாக நிறுத்தம்

மீனம்பாக்கம், டிச.15

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இருந்து அந்தமானுக்கு தினமும் 5 முதல் 7 விமானங்கள் வரை இயக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் அந்தமானில் விமான நிலைய பராமரிப்பு பணிகள் நடந்ததால் கடந்த மாதம் முதலாம் திகதியில் இருந்து 4ஆம் திகதி வரையும், 15ஆம் திகதியில் இருந்து 18ஆம் திகதி வரையும், மீண்டும் 19ஆம் திகதியில் இருந்து டிசம்பர் 2ஆம் திகதி வரையும் சென்னையில் இருந்து அந்தமானுக்கு விமான போக்குவரத்து முழுவதுமாக நிறுத்தப்பட்டது.

தற்போது 4 ஆவது முறையாக ஓடுபாதை சீரமைப்பு, பராமரிப்பு பணிகள் காரணமாக நேற்று முன்தினம் முதல் நாளை 16 ஆம் திகதி வரை 4 நாள்கள் சென்னையில் இருந்து அந்தமானுக்கு விமான சேவை நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளது. இதனால் சென்னையில் இருந்து அந்தமானுக்கு தினமும் சென்று வரும் விமான நிறுவனங்கள் தங்களுடைய விமான சேவைகளை வருகிற 16ஆம் திகதி வரையில் ரத்து செய்யப்பட்டு உள்ளன எனக் கூறப்படுகிறது. மீண்டும் 17ஆம் திகதியில் இருந்து அந்தமானுக்கு சென்னையில் இருந்து விமான சேவைகள் தொடங்கும் என தெரிவித்து உள்ளன.

மேலும், அந்தமானுக்கு ஏற்கனவே முன்பதிவு செய்த பயணிகளுக்கு, இதுபற்றி தகவல் தரப்பட்டு டிக்கெட்டுகளை வேறு திகதிகளுக்கு மாற்றுதல் அல்லது முழு பணமும் திரும்பக் கொடுத்தல் போன்ற முறைகளை விமான நிறுவனங்கள் செய்து கொண்டன என்ச்வும், இதனால் பயணிகளுக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லை எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# வாசிப்பு மாதத்தை ஒட்டி திருமலையில் பட்டிமன்றம்






(ர.ரஜீந்திரமூர்த்தி)

திருகோணமலை நகராட்சி மன்ற பொதுநூலகத்தின் ஏற்பாட்டில் பிரதம நூலகர் வரதகுமார் தலைமையில் தேசிய வாசிப்பு மாதத்தின் செயற்பாடுகளில் ஒன்றாக இன்று டிசம்பர் 15 காலை 9.30ணிக்கு நூலக கேட்போர்கூடத்தில் சிறப்புப் பட்டிமன்றமும் பயிற்சிப் பட்டறையும் நடைபெற்றன.

'நாட்டின் இன்றைய பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணம் அரசியல்வாதிகளா? மக்களா?' என்ற தலைப்பிலான பட்டிமன்றத்தில் திருகோணமலையின் பிரதான பாடசாலைகளான ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி, ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி, உவர்மலை விவேகானந்தா கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் கல்லூரி அகியவற்றின் மாணவர்கள் பங்கெடுத்தனர். நடுவர்களாக திருகோணமலை நகராட்சி மன்ற செயலாளர் வெ.இராஜசேகர், அரசியல் ஆய்வாளர்

ஆ.யதீந்திரா, சட்டத்தரணி சி.ஐஸ்வர்யா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். அவர்களோடு நிகழ்வின் வளவாளராக இலங்கை சட்டக்கல்லூரியின் சட்டக்கல்வியை நிறைவு செய்துள்ள நீதிமன்ற முதலியார் எஸ். கமலும் கலந்து சிறப்பிதார்.

மாணவர்களிடையே வாதத்திறனை அதிகரித்தல் மற்றும் வாசிப்புத்திறனை மேம்படுத்தல் ஆகிய நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வை சிறப்பிக்க திருகோணமலை நகராட்சிமன்ற உறுப்பினர்களான க.ஜெயபிரகாஷ், த.கௌரிமுகுந்தன் ஆகியோர் பங்கெடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.









# மட்டக்களப்பில் பாடசாலை மாணவரின் பைகளைச் சோதனையிடும் நடவடிக்கை

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் போதை பொருள் பாவனையைத் தடுக்கும் விசேட செயற்பாடாக பாடசாலை மாணவர்களை சோதனையிடும் நடவடிக்கையை நேற்று புதன்கிழமை பொலிஸார் ஆரம்பித்தனர்.

சென்.மைக்கல் ஆண்கள் தேசிய பாடசாலையில் மோப்பநாய்கள் சகிதம் மாணவர்களின் பையை சோதனையிடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

நாட்டில் மாணவர்களுக்கிடையே போதை பொருள் பாவனை அதிகரித்துள்ளதையடுத்து அதனைத் தடுப்பதற்காக நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்களைச் சோதனையிடும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் கிழக்கு மாகாண சிரே–டபிரதிப் பொலிஸ் மா அதிபர் ராஜித ஸ்ரீ தமிந்தவின் ஆலோசனைக்கமைய மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பி.கே.பி. ஹ்ரா்ட்டியாராச்சி தலைமையில் நேற்று புதன்கிழமை காலை 6.30 மணிக்கு மைக்கல் தேசிய ஆண்கள் பாடசாலையின் வாசலில் மேப்பநாய்கள் சகிதம் பாடசாலைக்குள் உள் நுழையும் மாணவர்கள் அவர்களது பைகள் என்பற்றை சோதனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்தச் சோதனை நடவடிக்கை தொடர்ந்து ஏனைய பாடசாலைகளில் இடம்பெறும் எனவும், போதைப்பொருள் வியாபாரிகள் மற்றும் பாவிப்பவர்கள் தொடர்பாக மாணவர்கள், பெற்றோர்கள் அறிந்திருந்தால் உடனடியாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு அறியதருமாறும் போதை பொருள் வியாபரிகள் தொடர்பாக விழிப்பாகவும் இருக்குமாறும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கேட்டுள்ளார்.

# தூயஅன்னை சாரதாதேவியின் 170 ஆவது ஜெயந்திதின விழா

## காரைதீவில் நேற்று அனுஷ்டிப்பு





(வேத சகர்)

இராமகிருஷ்ண மின் தூயஅன்னை ஸ்ரீ சாரதாதேவி அம்மையாரின் 170 ஆவது ஜெயந்தி தின விழா காரைதீவில் நேற்று புதன்கிழமை கொண்டாடப்பட்டது.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் பிறந்த இல்லத்தில் அன்னையின் ஜெயந்தி விழா இடம் பெற்றது.

மணிமண்டப செயலாளரும் கலாச்சார உத்தியோகத்தருமான கு. ஜெயராஜ் தெய்வத் திரு மூவருக்கு பஞ்சாரத்தி காட்டி விசேட பூஜை நடத்தினார். சுவாமி விபுலானந்த ஞாபகார்த்த பணிமன்றத்தின் முன்னாள் தலைவர், வி.ரி.சகாதேவ ராஜா, ஓய்வு நிலை அதிபர் கே.புண்ணியநேசன், மட்டக்களப்பு இந்து கலாச்சார உத்தியோகத்தர் திருமதி எழில்வாணி பத்மகுமார், காரைதீவு கலாச்சார உத்தியோகத்தர் திருமதி சிவலோஜினி மற்றும் இந்துசமய கலாச்சார அலுவல்கள் திணைக்கள உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# செவிப்புலன் வலுவற்ற 50பேருக்கு திருமலையில் நிவாரணம் வழங்கல்





(மட்டு. துாரா)

இலங்கை 'காப்போம்' தொண்டு நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட – செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் அங்கத்தவர்களின் குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று மாலை நிறுவனத்தின் திருகோணாமலை மட்டிக்களி கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

காப்போம் தொண்டு நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் கு.பிரதிப்கரன் (திலீப்) தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சித்த ஆயுள்வேத மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் மா.நிரஞ்சன் கலந்து கொண்டு உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில், காப்போம் நிறுவனத்தின் உதவிப் பணிப்பாளர், செயலாளர், பொருளாளர் மற்றும் நிறுவாக உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, செவிப்புலன் வலுவுற்றோர் புனர்வாழ்வு நிறுவன அங்கத்தவர்களின் 50 குடும்பங்களுக்கு தலா ஐயாயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டம்சி குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் அறிமுகமானது இந்திய மின்சார ஸ்கூட்டர்!





டக்ளஸ் அண்ட் சன்ஸ் நிறுவனத்துடன் இணைந்து இந்தியாவின் OCAYA மின்சார ஸ்கூட்டர்கள் இலங்கையில் நேற்று அறிமுகப் படுத்தப்பட்டன.

OCAYA EV என்பது இந்தியாவின் மிக வேக மாக வளர்ந்து வரும் EV 2-wheeler வாகன நிறுவனமாகும், இது இந்தியாவில் சிறந்த மின்சார ஸ்கூட்டர்களை மலிவு விலையில் வழங்குகிறது. இந்த மின்சார ஸ்கூட்டர் விலை, மைலேஜ் மற்றும் ரொப்ஸ்பீடு ஆகியவற்றின் அடிப்படையில் முழுமை யான வரம்பைக் கொண்டுள்ளது. இந்நிறுவனம் இந்திய சந்தையிலும் இலங்கையிலும் Freedom, Class IQ,Avion IQ ஆகிய மூன்று மெதுவான மின்சார ஸ்கூட்டர்களை வழங்குகிறது.

டக்ளஸ் அண்ட் சன்ஸ் குழும நிறுவனங்களின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான சரோஜ் பெரேரா, OKAYA Power Private Limite- இன் இன்டர்நேனல் பிசினஸின் துணைத் தலைவர் அனில் குப்தா மற்றும் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோர் நிகழ்வில் OKAYA EV ஸ்கூட்டரை அறிமுகப் படுத்தினர்.

## நேற்று நள்ளிரவு முதல் சீமெந்து விலை குறைப்பு

நேற்று (புதன்கிழமை) நள்ளிரவு 12 மணி முதல் அமுலுக்கு வரும் வகையில் சீமெந்து மூடை ஒன்றின் விலை 225 ரூபாவால் குறைக் கப்பட்டுள்ளது.

முன்னதாக ஒரு மூடை சீமெந்தின் விலை சந்தையில் 2 ஆயிரத்து 975 ரூபாவாகக் காணப்பட்ட நிலையில் புதிய விலை 2 ஆயிரம் 750 ரூபா வாகக் குறைந்துள்ளது.

## ஹுனுபிட்டிய கங்காராம விகாரை புண்ணிய பூமியாக அபிவிருத்தி!

ஹுனுபிட்டிய கங்காராம விகாரையை புண்ணிய பூமியாக அபிவிருத்தி செய்வதற்கான அதிகாரபூர்வ பத்திரம் ஜனாதிபதி யால் கையளிக்கப்பட்டது. வரலாற்றுச் சிறப்புமிக்க ஹுனுப்பிட்டிய கங்காராம விகாரையை புண்ணிய பூமியாக அபிவிருத்தி செய்வதற்கான அதிகாரபூர்வ பத்திரத்தை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஹுனுப்பிட்டிய கங்காராம விகாரையின் விகாராதி பதி வணக்கத்துக்குரிய கலபொட ஞானிஸ்ஸர நாயக்க தேரரிடம் கையளித்தார். ஹுனுப்பிட்டிய கங்காராம விகாரையின் வணக்கத்துக்குரிய கலபொட ஞானிஸ்ஸர நாயக்க தேரரின் ஜனன தினத்தை முன்னிட்டு நேற்று (புதன்கிழமை) விகாரைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி, தேரரிடம் நலம் விசாரித்தார்.

உள்நாட்டிலும் வெளிநாட்டி லும் பௌத்த மக்களால் பெரி தும் மதிக்கப்படும் ஹுனுப்பிட்டிய கங்காராம விகாரையை பாது காத்து எதிர்கால சந்ததியினருக்கு வழங்குவது தொடர்பான அதி காரபூர்வ பத்திரத்தில் ஜனாதி பதி கையொப்பமிட்டார்.

கங்காராம விகாராதிபதி வணக்கத்துக்குரிய கலாநிதி கிரிந்தே அஸ்ஸஜி தேரர் தலைமையில் மகா சங்கத்தி னர், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷ, முன் னாள் பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷ, அமைச்சர் பந்துல குணவர்தன, நாடாளுமன்ற உறுப்பினர் பைசர் முஸ்தபா, காலநிலை மாற்றம் தொடர் பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, உபாலி குழுமத்தின் முகாமைத் துவ பணிப்பாளர் நிமல் வெல் கம மற்றும் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## பதக்கங்களை வென்ற யாழ். சிறைச்சாலை உத்தியோகஸ்தருக்கு மகத்தான வரவேற்பு!



மெய்ஜி கோப்பை இலங்கை ஓபன் கராத்தே சுற்றுப் போட்டி - 2022 இல் தங்கப்பதக்கத்தை பெற்ற யாழ்ப்பாண சிறைச்சாலை உத்தியோகஸ்தருக்கு நேற்று (புதன்கிழமை) யாழ்ப்பாண சிறைச்சாலையில் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

வென்னப்புவ எஸ். பீரிஸ் உள்ளக விளையாட்டரங்கில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மேற்படி கராத்தே சுற்று போட்டியில் பல்வேறு திணைக்கள கராத்தே அணிகள் பங்குபற்றியிருந்த நிலையில் நாடு பூராகவும் உள்ள சிறைச் சாலைகளில் தெரிவு செய்யப் பட்ட சிறைச்சாலை உத்தியோகத் தர்க ளும் பங்குபற்றி இருந்த னர்.

அதில், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் பணிபுரியும் உத்தியோகத்தர் ரி.பிரசாத் பங்கு பற்றி இருந்த நிலையில், 01 தங்க பதக்கத்தையும் 01 வெள்ளி பதக்கத்தையும் பெற்று தனது வெற்றியை பதிவு செய்திருந்தார்.

கராத்தே போட்டியில் வெற்றி பெற்ற சிறைச்சாலை உத்தி யோகத்தர்களுக்கு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பதக்கங்களை பெற்ற யாழ்ப்பாண சிறைச்சாலை உத்தியோகத்தருக்கு நேற்று (புதன்கிழமை) யாழ்ப்பாண சிறைச் சாலையில் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

வெற்றியீட்டிய வீரருக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு பொன்னாடை போர்த்தி வரவேற் பளிக்கப்பட்டது.

அந்நிகழ்வில் யாழ்ப்பாண சிறைச்சாலையின் சிறைச்சாலை அத்தியட்சகர், யாழ்ப்பாண சிறைச் சாலையின் பிரதம பொறுப்பதி காரி மற்றும் யாழ்ப்பாண சிறைச் சாலை உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

## போதைப்பொருள்களுக்கு அடிமையான மாணவர்களை விடுவித்து, நல்வழிப்படுத்தும் விசேட வேலைத்திட்டம்!



நுவரெலியாவில் நகர மற்றும் தோட்டப்பகுதிகளிலுள்ள சில பாடசாலைகளில் போதைப் பொருளுக்கு அடிமையான மாணவர் களை அதிலிருந்து விடுவித்து, நல்வழிப்படுத்துவதற்கான விசேட வேலைத்திட்டம், நேற்று (புதன்கிழமை) ஆரம்பிக்கப்பட்டது.

கொட்டகலை நகரம் மற்றும் அதனை அண்மித்த தோட்டப்பகுதி களில் உள்ள பாடசாலை மாணவர்கள் சிலர், போதைப்பொருள்களை பாவித்து வருகின்றனர் என சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதி பர்களால், திம்புள்ள – பத்தனை பொலிஸார் மற்றும் வர்த்தக சங்கத் தினரின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர். இந்நிலையிலேயே மாணவர்களைப் பாதுகாப்பதற்காக விசேட குழுவொன்றை அமைத்து, அதன் ஊடாக வேலைத்திட்டத்தை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தேசிய அபாயகர மருந்துகள் கட்டுப்பாட்டு சபையின் நுவரெலியா மாவட்ட இணைப்பதிகாரி எஸ்.எஸ்.டபிள்யூ.விஜேரத்னவால், பொலிஸ் அதிகாரிகள், பொது சுகாதாரப் பரிசோதகர்கள், அதி பர்கள், ஆசிரியர்கள் மற்றும் சிவில் பிரதிநிதிகளுக்கு இது பற்றி தெளிவுபடுத்தப்பட்டது.

குறிப்பாக பாடசாலை மாணவர்களுக்கு மிகவும் சூட்சுமமான முறையில் போதைப்பொருள்களை விநியோகிக்கும் இடங்களை அடையாளம் கண்டு, சட்டரீதியான நடவடிக்கையை மேற்கொள்வதற் கும், போதைக்கு அடிமையான மாணவர்கள் தொடர்பில் விழிப்பாக இருக்க வேண்டும் எனவும் எஸ்.எஸ்.டபிள்யூ. விஜேரத்ன கூறியுள் ளார்.

பாடசாலைக்குள் போதைப்பொருள்கள் உள்நுழைவதை முற்றாகத் தடுப்பதற்கு அதிபர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட கல்விச் சமூகத்தினர் மற்றும் பெற்றோரின் ஒத்துழைப்பு அவசியம் எனவும், பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனை – விநியோகத்தில் ஈடுபடுபவர்கள் தொடர்பில் தகவல் இருந்தால் அருகிலுள்ள பொலிஸ் நிலையத் துக்கு தெரியப்படுத்துமாறும் அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

## யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் தொழிற் சந்தை ஆரம்ப நிகழ்வு!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத் துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத் தின் தொழிற் சந்தை நிகழ்வு நேற்று (புதன்கிழமை) காலை 9 மணி முதல் கலாசாலை வீதி, திரு நெல்வேலி கிழக்கில் அமைந்துள்ள முகாமை த்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீட வளாகத்தில் நடை பெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மனிதவள முகாமைத்துவத்துறையின் ‘AHEAD’ செயற்றிட்டத்தின் கீழ், தொழிற்றுறைத் தொடர்பு மையம் மற் றும் தொழில் வழிகாட்டல் அலகு ஆகியவை இணைந்து நடத்தும் இந்தத் தொழில் வாய்ப்பு சந்தையில் கணக்கியல், நிதியியல், மனிதவள, சந்தைப்படுத்தல், வணிகத் தொழிநுட் பம் , தொடர்பாடல் மற்றும் ஆடை உற்பத்திகளில் ஈடுபடும் சுமார் 27 இற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் கலந்துகொண்டு நான்காம் வருட இரண்டாம் அரையாண்டு மாணவர்களுக்கான பயிற்சி வாய்ப்பைப் (Internship Opportunities) பெற்றுக் கொடுப்பதற்கான நேர்முகத் தேர்வுகளை நடத்தின.

இந்த நிகழ்வில் 500 இற்கும் மேற் பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு தமது தொழில் வாய்ப்புகள் பற்றிய அறிவைப் பெற்றுக்கொண்டனர்.

மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சை மற் றும் சுயவிவரக்கோவை என்பவற்றை எவ்வாறு சிறந்த முறையில் ஒழுங்கமைத்து வெற்றியடைவது தொடர்பான செயலமர்வு ஒன்றையும் இலங்கை ஆளணி பட்டய நிறுவனம் (CIPM) நடத்தியது.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, பேரவை உறுப்பினர் கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் பணியாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.



## தனித்துப்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் இன்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறினார்.

கடந்தஞாயிற்றுக்கிழமைவவுனியாவில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில், எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இல்லாமல் பங்காளிக் கட்சிகள் மூன்றும் தனித் தனியாகத் தேர்தலை எதிர்கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டது எனச் செய்திகள் வெளியாகி இருந்த நிலையில் , அது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனிடம் கேட்ட போதே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழரசுக் கட்சி தனியாகப் போட்டியிடுவது என்பது, தமிழரசுக் கட்சியின் தனி முடிவல்ல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளுடன் இணைந்துதான் இந்த முடிவை எடுக்கவுள்ளோம்.

தற்போது உள்ள தேர்தல் முறைமையின் அடிப்படையில் நாங்கள் போட்டியிடுவோமாக இருந்தால்– தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கின்ற மூன்று கட்சிகளும் தனித் தனியே போட்டியிடுவதாக இருந்தால் கூடுதலான ஆசனங்களைப் பெறக் கூடிய வாய்ப்பு உள்ளது.

சில சபைகளில் அவ்வாறு போட்டிடுவதால் ஆசனங்கள் கூடும் எனக் கூற முடியாது. ஆனால், சில இடங்களில் கூறலாம். சில இடங்களில் குறையலாம். நாங்கள் பலமாக இருக்கின்ற பிரதேசங்களில் போட்டியிட்டால், எல்லா வட்டாரத்தையும் ஒரே கட்சி வெல்லுாக இருந்தால் மட்டுமே விகிதாசாரத்தில் வருகின்ற ஆசனத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். ஒரே கட்சியாகப் போட்டியிட்டால் வட்டாரங்களில் கூடுதலாக வென்றால் விகிதாசார முறையில் நமக்கு ஆசனங்கள் கிடைக்காது.

இந்தக் கணக்கை அடிப்படையாக வைத்து த்தான் ஒரு தொழில்நுட்ப ரீதியாக நாங்கள் இதனை ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கின்றோம். இது சம்பந்தமாக பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான செல்வம் அடைக்கலநாதனுடனும், தர்மலிங்கம் சித்தார்த்தனுடனும் பேசியிருக்கின்றேன். எனவே, அவர்களுடன் பேசித்தான் நாங்கள் இந்த விடயத்தை அறிவித்திருந்தோம்.

ஆனால், நாங்கள் இறுதி முடிவெடுக்கவில்லை. ஒவ்வொரு பிரதேசத்திலும், ஒவ்வொரு சபையிலும் எப்படியான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதனை வைத்து நாங்கள் அந்த முடிவை எடுப்போம்.

சில வேளைகளில் சில இடங்களிலே சேர்ந்து போட்டியிடலாம். சில இடங்களில் தனித்தனியே போட்டிடலாம். எனவே, அந்தந்த சூழ்நிலைக்கேற்றவாறு தொழில்துறை ரீதியாக அந்தத் தீர்மானங்கள் எடுக்கப்படும்.

பங்காளிக் கட்சிகளுடன் இணைந்து அவர்களுடன் சமரசமாகப் பேசித்தான் இந்த முடிவை எடுப்போமே தவிர தமிழரசுக் கட்சி தனித்துத் தீர்மானம் எடுக்கும் என்று நாங்கள் கூறவில்லை. பங்காளிக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் பேசித்தான் முடிவை எடுப்போம் –என்றார்.

## 180 கிலோ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் அதனைக் கடத்தி வந்தார் எனும் குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்., குருநகர் கடற்பரப்பில் இன்று சந்தேகத்துக்கிடமான முறையில் காணப்பட்ட படகு ஒன்றைக் கடற்படையினர்வழிமறித்துச்சோதனையிட்ட போது படகில் இருந்து கஞ்சாவை மீட்டனர்.

அதையடுத்து படகில் இருந்த நபரைக் கைது செய்த கடற்படையினர், படகையும் கைப்பற்றினர்.

கைதான நபரைக் கைப்பற்றப்பட்ட கஞ்சா மற்றும் படகுடன் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

## ஒரு கல்லில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் சந்திப்பொன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பழுத்த அரசியல்வாதியாவார். ஆனால், மக்கள் மத்தியில் அவரது இராஜ தந்திரங்கள் பெரிதாக விளங்குவதில்லை. இதனால்தான் 2020 நாடாளுமன்றத் தேர்தலில் அவரது ஐக்கிய தேசியக் கட்சி பூச்சிய நிலைக்குச் சென்றது. அதனோடு ரணிலின் அரசியல் சரித்திரம் பூச்சியமாகிவிட்டதுஎன்றுதான் கணிசமானவர்கள் நினைத்தார்கள். ஆனால், பூச்சியத்தில் இருந்தும் இராச்சியத்தின் தலைவர் ஆகலாம் என்பதை ரணில் நிரூபித்து விட்டார்.

தற்போது அவர் தேசிய இனப்பிரச்சினையை 75 ஆவது சுதந்திர தினதுக்கு முன்பாகத் தீர்த்து விடப்போவது போல் பேசி வருகின்றார். ஆனால், அது சாத்தியமற்றது என்பதைத் தமிழ் தலைவர்கள் நன்கு அறிவார்கள்.

ரணில் விக்கிரமசிங்க 45 வருட கால நாடாளுமன்ற அனுபவசாலி என்பதுடன் பல்வகைப் பதவிகளை வகித்தவர். தற்போது சாத்தியமற்றது என்று நினைத்த ஜனாதிபதிப் பதவியையும் தனதாக்கியுள்ளார்.

இந்தநிலையில், இனப்பிரச்சினை தீர்வு விடயம் தொடர்பான பேச்சு என்ற ஒரு கல்லின் மூலமாக பல மாங்காய்களை விழுத்த அவர் நினைக்கின்றார். எதுஎப்படியாக இருந்தாலும் அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் அந்தப் பேச்சில் கலந்துகொள்ள வேண்டியது அவசியமாகவுள்ளது.

அவ்வாறு கலந்துகொள்ளாது விட்டால், தான் நியாயமான அடிப்படையில் இனப்பிரச்சினையைத் தீர்க்க முற்பட்ட போதும் தமிழ்த் தலைமைகள் ஒத்துழைக்கவில்லை என்றும், அவர்கள் இனப்பிரச்சினைய அப்படியே வைத்துக் கொண்டு அரசியல் செய்ய விரும்புகின்றார்கள் என்றும் குற்றச்சாட்டை உருவாக்கி சர்வதேசத்துக்கு ஜனாதிபதி சொல்லுவார்.

இதனைத் தமிழ்த் தேசியத் தலைவர்கள் அறிவார்கள். எனவே, தமிழ்த் தலைவர்கள் அனைவரும் இந்தப் பேச்சில் கலந்துகொள்ள வேண்டும். ஆனால், காலத்தை நீடிக்க விடக்கூடாது என்பது கணிசமான தமிழ் மக்களின் நிலைப்பாடாகும். அது அவ்வாறு இருக்க, ஜனாதிபதி ரணில் பேச்சு என்ற தந்திரக்கல்மூலமாகவிழுத்தநினைக்கும் மாங்காய்கள் எவை எனப் பார்ப்போம்.

சர்வதேசத்தின் பார்வையில், ஜனாதிபதி தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் சாதகமாகச் செயற்படுகின்றார் என்ற விம்பம் ரணிலுக்கு ஏற்படும். அதேவேளை, சர்வதேச மத்தியஸ்த பொறிமுறையில் இருந்து தப்பிக்க கொள்ள ஜனாதிபதி நினைக்கிறார். ஆனால், பேச்சின் அடுத்த கட்டத்திலாவது சர்வதேசத் தலையீடு அவசியமானதாகும். குறிப்பாக இந்தியாவின் தலையீட்டைத் தவிர்க்க முடியாது. அமரிக்கா, கனடா போன்ற நாடுகளது தலையீடுகளும் அவசியமானது.

சாதாரண தமிழ் மக்களின் பார்வையில், ரணில் இனப்பிரச்சினையைத் தீர்கக விரும்புகின்றார், அவர் ராஜபக்சக்களை விடப் பரவாயில்லை, இனவாதம் அற்றவர் அல்லது குறைந்தவர் என்ற எண்ணம் ஏற்படலாம்.

மொட்டுக் கட்சியினர் பார்வையில் தமக்கு ஏற்பட்ட அதிகார நெருக்கடியில் இருந்தும், நாட்டின் பொருளாதார நெருக்கடியில் இருந்தும் மீள்வதற்கு இந்த நாடகத்தைக் குறித்த காலம் நடத்த வேண்டும், பின்னர் சிங்களவர்களின் காவலர்களாகக் காட்டி இதனைக் குழப்ப ரணில் வழிவகுப்பார் என்றும் கருத வாய்ப்புள்ளது.

தமிழ்த் தேசியக் கட்சிகள் பார்வையில் பேச்சைப் புறக்கணித்தால் தாம் தீர்வுக்கு எதிரானவர்கள் என்ற பெயரை ரணில் ஏற்படுத்தி விடுவார் என நினைக்க இடமுண்டு. எனவே, தம்பக்கமாக அடிக்கப்பட்ட பேச்சு என்ற பந்தை கவனமாகக் கையாள வேண்டிய நிலைப்பாட்டில் தமிழ்த் தரப்பினர் உள்ளனர்.

ஜனாதிபதியின் பார்வையில் பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரும்பாத சமஷ்டித் தீர்வை வழங்க முடியாது, அவர்களது கருத்தையும் உள்ளடக்கிய குறைந்த பட்சமான தீர்வையே தர முடியும் என்ற நிலையில் உள்ளார்.

மேலும் கிழக்கு முஸ்லிம் தலைவர்களையும், கூடவே சந்திரகாந்தன் (பிள்ளையான்), கிழக்குச் சிங்களத் தலைவர்கள் போன்றவர்களைப் பயன்படுத்தி வடக்கோடு கிழக்கை இணைக்கும் கோரிக்கையை நிராகரிக்க முடியும் என்ற நிலைப்பாடு ஜனாதிபதிக்கு உண்டு.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சியினர் பார்வையில் ரணில் எப்படியாவது, அவரது இப்படியான தந்திரோபாயங்கள் மூலமாக தமது கட்சிக்கு மீண்டும் செயற்கைச் சுவாசம் அளித்து உயிர்ப்பிப்பார் என்று எதிர்பார்க்கின்றனர்.

மேலும், சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினரின் ஒற்றையாட்சிசிந்தனையானதுராஜபக்சக்களின் சிந்தனைத்தளத்துக்கு ஒப்பானது என்பதை வெளிக்காட்ட ஜனாதிபதி விரும்புகின்றார்.

இப்படியாக ஒரு கல்லில் பல மாங்காயகளை விழுத்த ஜனாதிபதி ரணில் நினைக்கின்றார்.

கடந்த 74 ஆண்டுகளாக சிங்களத் தலைவர்கள்கையாண்டஅபதந்திரங்கள் யாவும் நாட்டுக்கும் மக்களுக்கும் அந்தரநிலையையே ஏற்படுத்தியுள்ளது. அபதந்திரம் தனக்கந்திரம் என்பதை இந்த நாட்டை ஆட்சி செய்த சிங்களத் தலைவர்கள்விளங்காமல்இருப்பதுதான் விந்தையாகவுள்ளது.

அந்த அபதந்திரந்தான் இந்த நாட்டின் சமூக பொருளாதார அரசியல் அனைத்தையும் அதள பாதாளத்துக்குத் தள்ளியுள்ளது.

இந்த நாட்டில் மூன்று விடயங்கள் நாட்டை வெகுவாகப் பாதித்துள்ளன. பேரின மேலாதிக்க அடிப்படைவாதம், தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படாமை, ஊழல் மோசடிகள்.

இந்த விடயங்களுக்கு நிலையான நியாயமான தீர்வு காணப்படாதவரை இந்த நாட்டையும் மக்களையும் எந்தத் தலைவர்களாலும் மீட்க முடியாது. இவற்றைத் தீர்ப்பதற்கு தலைவர்களுக்கு இதயசுத்தி இருக்க வேண்டும், மாறாக இதய சொத்தியான தலைவர்களால் நாட்டை அழிக்கவே முடியும், ஆக்க முடியாது என்பதே கடந்த 74 வருடகால தரித்திரமான சரித்திரமாகும்.

அந்த தரித்திர சரித்திரத்தில் இருந்து விடுபட பேரின அடிப்படைவாதம் அனுமதிக்காது. அதனைக் கடக்க முடியாத தலைவர்களே இலங்கையை இதுவரை ஆட்சி செய்துள்ளார்கள்.

ஜனாதிபதி ரணிலுக்கு பேரின வாதத்தை கடக்கக்கூடிய ஆளுமை ஆற்றல் உண்டா? என்பதுதான் எமது கேள்வியாகும். மொட்டுக் கட்டுப்பாட்டில் ரணில் உள்ளவரை அது அவரால் முடியாது. மொட்டுக் கட்டுப்பாட்டை உடைப்பதாக இருந்தால் இரண்டரை வருட காலத்தின் பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்த முடியும். அதற்கான வாய்ப்பு எதிர்வரும் 2023 மார்ச் மாதத்தில் உண்டு. பொது மக்களதும், எதிர்க்கட்சிகளதும் அழுத்தம் அதிகரித்தால் அது சாத்தியமாகும் –என்றார்.

## 2 நாய்களை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாய்கள் இரண்டை விழுங்கி விட்டு அசைய முடியாத நிலையில் அங்கேயே உறங்கியுள்ளது.

விடுதியின் பணியாளர்கள் காலையில் நாய்களைக் காணவில்லை எனத் தேடிய போது, விடுதி வளாகத்தில் முதலை ஒன்று உறக்கத்தில் இருப்பதைக் கண்ணுற்றுள்ளார்கள்.

பின்னர் அயலவர்களின் உதவியுடன் முதலையை உயிருடன் பிடித்து மரமொன்றில் கட்டி வைத்ததுடன் அது தொடர்பில் வனவிலங்கு பாதுகாப்புப் பிரிவினருக்கு அறிவித்ததையடுத்து , அவர்கள் சம்பவ இடத்துக்கு வந்து முதலையை மீட்டுச் சென்றுள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

